# சங்ககாலப் பாண்டிய அரசர்கள்

**சு.லதா**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கே.ஜி. கலை அறிவியல் கல்லூரி,
கோவை

வரலாற்று நிகழ்வுகள் காலத்தை அடிப்படையாகக்கொண்டு பதியப்படுகின்றன. பல வகைபட்ட சான்றாதாரங்கள் சங்ககாலப் பாண்டிய அரசர்களின் காலத்தைக் கணக்கிட உதவுகின்றன. கல்வெட்டுகள், பட்டயங்கள், இலக்கியங்கள் போன்றவை சரியான வரலாற்றைத் தந்து நிற்கின்றன. சங்ககாலப் பாண்டிய அரசர்களின் வரலாற்றைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கி.பி.பத்தாம் நூற்றாண்டு வரையிலான காலகட்டங்களை அறிந்துகொள்ள வேண்டும்.

**கடுங்கோன்**

சங்க காலத்துப் பாண்டியரின் வழித்தோன்றல் கடுங்கோன் என்பான் ஆவான். இவன் கி.பி. 575 முதல் 600 வரை ஆட்சி செய்தான். இவன்தான் பாண்டியர் பரம்பரையை தோற்றுவித்தவன்.

**மாறவர்மன் சூளாமணி**

இவன் கடுங்கோனின் மகன் ஆவான். மாறவர்மன் என்ற விருது பெயரை பெற்ற முதல் பாண்டிய அரசன் ஆவான். இவனுடைய காலம் கி.பி. 600 முதல் கி.பி. 620 வரை எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**செழிய வேந்தன்**

இவன் சயந்த வர்மன் என்றும் அழைக்கப்படுகின்றான். இவனுடைய காலம் கி.பி. 620 முதல் கி.பி. 642 வரை எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவனுக்கு "வானவன்" சிறப்புப் பெயரும், "செழியன்" சிறப்புப் பெயரும், உண்டு. அரிகேசரி மாறவர்மனின் தந்தை இவன் எனச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. சடையன் என்றும் அழைக்கப்பட்டான்.

**மாறவர்மன் அரிகேசரி**

இந்தப் பாண்டிய அரசனைக் கூன்பாண்டியன் நெடுமாறன், சுந்தர பாண்டியன் என்று சின்னமனூர்ச் சிறிய செப்பேடு குறிப்பிடுகிறது. இவனுடைய ஆட்சிக் காலம் கி.பி. 642 முதல் கி.பி. 690 வரை எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவன் பல விருதுப் பெயர்களையும் பெற்று இருந்தான். அரிகேசரி, அதியமான், பராங்குசன், வானவன், மாறன், நெடுமாறன், பூழியன், மீனவன், விகாரி, இரனோதயன், இலவார்த்தகன், என்ற பெயர்களைப் பெற்று இருந்தான்.

**கோச்சடை இரணதீரன்**

இவனுடைய காலம் கி.பி. 700 முதல் கி.பி. 730 வரை எனக் கணக்கிடப்பட்டுள்ளது. சேரர், சோழர், கொங்கர், கருநாடக வேந்தன் என்று பலரை வென்றுள்ளான். இதோடு மட்டும் அல்லாமல் சாளுக்கிய நாடு, கங்க நாடு சேர்ந்த கருநாடக நாடு முழுவதிலும் இவனது ஆட்சி பரவியிருந்தது. இவன் பல்லவ இளவரசியை மணந்து கொண்டான். தனது மகளைச் சோழ அரசனுக்கு மணம் செய்து கொடுத்தான்.

**அரிகேசரி பராங்குச மாறவர்மன்**

இவன் முதலாம் இராச சிம்மன் ஆவான். இவனுடைய காலம் கி.பி. 730 முதல் கி.பி. 769 வரை எனக் கணக்கிடப்பட்டுள்ளது. கோச்சடையன் இரணதீரன் தன் மகனுக்குத் தாய்வழிப் பாட்டனின் பெயராக முதலாம் இராசசிம்மன் என வைத்திருக்கலாம். இவன் தேர்மாறன் என்றும் அழைக்கப்பட்டான். இவனுடைய ஆட்சி சேரநாடு, சோழ நாடு, கொங்கு நாடு வரையில் பரவியிருந்தது.

**நெடுஞ்சடையப் பராந்தகன்**

இவன் முதலாம் வரகுணன் என்று அழைக்கப்பட்டான். இவனுடைய காலம் கி.பி. 768 முதல் கி.பி. 815 வரை எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவன் மாறவர்மனுக்கும், கங்க நாட்டு இளவரசியான பூசுந்தரிக்கும் பிறந்தவன் ஆவான். சிரீவரன், சிரீமனோகரன், சினச்சோழன், புனப்பூழியன் வீதகன் மகன், வீரயளிச்சுருதன், விக்கிரமபாரகன், வீரப்புரோகன், மருத்மலன், மான்யசாசனம் மதூபமன் போன்ற பல விருதுப் பெயர்களை உடையவன். இவனுக்குப்பின் இவனுடைய மகன் சிரீமாறன் சிரீ வல்லபன் ஆட்சி செய்தான்.

**சிரீமாறன் சிரீவல்லவன்**

இவனுடைய காலம் கி.பி. 815 முதல் கி.பி. 862 வரை எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவன் முதலாம் வரகுணன் என்று அழைக்கப்பட்டான். இவன் பராந்தக நெடுஞ்சடையன் என்று வரலாறு குறிப்பிட்டுள்ளது. சின்னமனூர்ச் செப்பேடு இரண்டு வரகுணர்களை எடுத்துச்சொல்கிறது. ஒருவனைச் சிரீமாறனின் தந்தையாகவும், இன்னொருவனைச் சிரீமாறனின் மைந்தனாகவும் வரலாறு எடுத்துக்கொண்டுள்ளது.

**இரண்டாம் வரகுணன்**

இவனுடைய காலம் கி.பி. 862 முதல் கி.பி. 885 வரை என்று கணக்கிடப்பட்டுள்ளது. சிரீமாறனின் முதல் மனைவியின் மகன் இவன். இவனுடைய ஆட்சிக் காலம் கி.பி. 862 முதல் கி.பி. 885 வரை என்று கணக்கிடப்பட்டுள்ளது.

**பராந்தக வீர நாராயணன்**

இவன் வரகுணவர்மனின் மற்றொரு தாய்க்குப் பிறந்தவன். இவனுடைய காலம் கி.பி.860 முதல் கி.பி. 905 வரை என்று கணக்கிடப்பட்டுள்ளது. சிரீமாறன் சிரீவல்லபனுக்கும் பொத்தப்பி சிரீகண்ட சோழனின் மகளான அக்கள நிம்மடிக்கும் மகனாகப் பிறந்தவன். இவனது பட்டத்து அரசி சேரகுலத்து இளவரசி வானவன் மாதேவி ஆவாள்.

**இரண்டாம் இராசசிம்மன்**

இவனுடைய காலம் கி.பி. 900 முதல் கி.பி. 920 வரை என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவனது காலத்தில் பாண்டியர் ஆட்சி, எட்டுத்திசையிலும் பரவியிருந்தது. இவன் இலங்கை அரசனின் படை உதவியோடு சோழனோடு வெள்ளூர் என்னும் இடத்தில் போர் செய்தான் இராசசிம்மன் சோழனால் தோற்கடிக்கப்பட்டான். மீண்டும் படை உதவி கேட்டு இரண்டாம் இராசசிம்மன் சென்ற பொழுது உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டது. இராசசிம்மன் இலங்கை அரசிடம் தன் மகுடத்தையும், அரச சின்னங்களையும் கொடுத்துவிட்டுத் தனது தாய் வானவன் மாதேவி பிறந்த நாடான சோழ நாட்டை அடைந்தான் என உதயேந்திரச் செப்பேடுகள் சொல்கின்றன. இவனுடைய ஆட்சிக் காலத்தில் பாண்டியர் ஆட்சி வீழ்ச்சியடையத் தொடங்கியது.

**வீரபாண்டியன்**

இவன் இரண்டாம் இராசசிம்மனின் மகன் ஆவான். பெரு முயற்சிக்குப்பின் கி.பி. 946-இல் ஆட்சி செய்யத் தொடங்கினான். இவன் பாண்டிய நாட்டின் தென்பகுதியை ஆண்டான். இவன் "சோழன் தலைக்கொண்ட வீரபாண்டியன்" என்று புகழப்படுகிறான். இவனது ஆட்சி மட்டும் இருபது ஆண்டுகள் நீடித்தன.

### பாண்டியர் ஆட்சி வீழ்ச்சி

இரண்டாம் ஆதித்த கரிகாலன் இவனை வென்றான். வீரபாண்டியன் கி.பி. 966-இல் நடைபெற்ற போரில் கொல்லப்பட்டான் இந்தச் செய்தியை "வீடன்" செப்பேடு உறுதி செய்கின்றது. இவனுக்குப் பின்னால் பாண்டியரைப் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. சோழர்கள் பாண்டிய நாட்டை ஆண்டனர். இராச பாண்டியன் குலாசினி என்ற பட்டம் பெற்றான். இராசராச மண்டலம் என்று பாண்டிய நாடு அழைக்கப்பட்டது. முதலாம் இராசேந்திரன் ஈழத்தின் மீது படையெடுத்துச் சென்று பாண்டியரின் பழைய மணிமுடியையும், இராச சின்னத்தை கைப்பற்றி கொண்டு வந்தான். பாண்டிய நாடும் அதன் உடைமைகளும் சோழர் வசமாயிற்று. பாண்டிய நாடு வளநாடு, கூற்றம், ஊர் என்ற பெயர்களில் பிரிக்கப்பட்டு இருந்தன. பல ஊர்கள் கொண்ட ஒவ்வொரு நாட்டிலும் ஒரு பேரவை இருந்தது. கூடல் என்றும், தமிழ்க்கெழு கூடல் என்றும் அழைக்கப்பெற்ற மதுரை நகரம் பாண்டியர்களுடைய தலைநகரமாக இருந்தது. பாண்டியருடைய அரியணை பள்ளிக்கட்டில் என்று அழைக்கப்பட்டது. அரசர்களுக்குப் பல உதவியாளர்கள் இருந்தனர். அரசியல் தலைவர்கள் மாறன்காரி, மாறன் எயினன், சாத்தன் கணபதி, ஏனாதி சமந்தன், சாத்தன், தீரதீரன், மூர்த்தி எயினன், சங்கரன் சீதரன் என்று அழைக்கப்பட்டனர். சிறந்த கல்வி கல்வி அறிவு நிரம்பியவர் சமய உயர்வு உடையவர். உத்தர மந்திரியாகப் பணியாற்றினர். படைத்தலைவன் மகா சாமந்தன் என்று அழைக்கப்பட்டான். அரசனின் ஆணையை நிறைவேற்றுபவர் "திருமந்திர ஓலை" என்று அழைக்கப்பட்டார். ஓலையை மேற்பார்வையிட்டுக் கையொப்பம் இடுபவர் திருமந்திர ஓலை நாயகன் என்று அழைக்கப்பட்டார். அரசருக்கு உதவிப்பணிகளை செய்பவர்கள் "அகப்பரிவார முதலிகள்" எனப்பட்டனர். "அரையர்கள்" என்று அழைக்கப்பட்டவர்களும் உதவி செய்தனர். நீதி நிருவாகம், நிருவாகத்துறைப் பயிற்சி இரண்டுக்குமே ஒருவரே நியமிக்கப்பட்டார். படைத்தலைவர்கள் கோயில் நிருவாகத்தைக் கவனித்துக் கொண்டனர். நிருவாகச் செலவு, படைச்செலவு, அலுவலர் ஊதியம், அரண்மனைச் செலவு, பொதுப்பணிச் செலவு அரசின் செலவினங்களாக இருந்தன. நிலங்கள் 24 அடிக்கோல், 14 அடிக்கோல் அளவுகளில் அளக்கப்பட்டன. வெள்ளான் வகை, சீவிதம், போகம்,காயாவிருத்தி, பிரம்மதேயம், தேவதானம், சாலாபோகம் எனப் பிரிக்கப்பட்டு இருந்தன. கோயில்களுக்கும், பார்ப்பனர்களுக்கும் கொடுக்கப்பட்ட நிலங்கள் பிரம்மதேயம், தேவதானம், சாலாபோகம் என அழைக்கப்பட்டன. பொது நிலங்கள் யாருக்கும் உரிமையாக இல்லாது இருந்தன. தனியாரிடம் இருந்து அரசர்கள் நிலம் வாங்கினர். அவற்றைக் கோயிலுக்கு தானம் கொடுத்தனர். அவை "தேவதானம்" என்று அழைக்கப்பட்டது.

### பாண்டியர்கள் பற்றி செப்பேட்டு சான்றுகள்

பாண்டிய அரசர்களின் செப்பேடுகளின் துணைகொண்டு கடுங்கோன் வழிவந்த பாண்டியரின் வம்சாவழியை அறிந்து கொள்ளலாம்.

1. வேள்விகுடிச் செப்பேடுகள்
2. சிரீ வரமங்கலச் செப்பேடுகள்

3. சின்னமனூர்ப் பெறிய செப்பேடுகள்

4. தளவாய்புரச் செப்பேடுகள்

5. சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகள்

6. சிவகாசிச் செப்பேடுகள்

7,8,9,10. ஆய்குல மன்னர்களின் செப்பேடுகள்

**1. வேள்விகுடிச் செப்பேடுகள்**

இந்தச் செப்பேடுகள் 18 பக்கங்கள் கொண்டதாகவும் 115 வரிகளை உடையதாக பத்து ஏடுகளை கொண்டதாகக் கிடைத்துள்ளது. பாண்டிய அரசன் கடுங்கோன் வழியில் வந்த ஆறு அரசர்கள் பற்றிய செய்திகள் இச்செப்பேட்டின் மூலமாகத் தெரிய வருகின்றன.

**2. சிரீ வரமங்கலச் செப்பேடுகள்**

இந்தச் செப்பேடு, ஏழு செப்பேடுகளில் 12 பக்கங்களாக எழுதப்பட்டுள்ளன. இந்தச் செப்பேட்டில் 1.பல்லவர், கேரளர்,கொங்கர் மீது கொண்ட வெற்றிகள். 2.வெள்ளூர், விண்ணம் போன்ற இடங்களில் பெற்ற வெற்றிகள். 3. காஞ்சிவாய்ப் பேரூரில் திருமாலுக்குக் கோயில் கட்டியது. 4. ஆய்வேள் அரசனை வென்றது. 5. கரவந்தபுரத்திற்கு மதிலையும் அகழியையும் அமைத்த விவரங்கள் காணப்படுகின்றன.

**3. சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகள்**

இதில் மூன்று ஏடுகள்தான் கிடைக்கப் பெற்றது. இந்தச் செப்பேடுகளில் பாண்டியரைப் பற்றிய புராணக்கதைகளும், பராக்கிரமச் செயல்களும் கூறப்பெற்றுள்ளன. இந்தச் செப்பேடுகளில் ஆணத்தி, உத்தரமந்திரியாகிய குண்டூர்த்தாயன்சிங்கன் ஆவான். இதை எழுதியவன் பாண்டிப்பெரும் பணைக்காரன் மகன் அரிகேசரி ஆவான். மூன்று செப்பேடுகளும் பராந்தக நெடுஞ்கடைனால் அளிக்கப்பட்டது.

**4. தளவாய்புரச் செப்பேடுகள்**

இதில் ஏழு ஏடுகள் ஆராய்ச்சிக்கு உதவும்படி உள்ளன. இந்தச் செப்பேடு மதுரை மாவட்ட கோவில்பட்டிக்கு அருகில் உள்ள தளவாய்புரம் எனும் ஊரில் எடுக்கப்பட்டது. அரிகேசரி என்னும் அரசனும் அவனது மகன் சடையவர்மனும்,அவனது மகன் இராசசிம்மன், அவன் மகன் வரகுணன், சிரீ வல்லபன், அவனுடைய மகன்களுள் வரகுணன், பராந்தகச்சடையன் என்று பாண்டிய பரம்பரை வரிசை கொடுக்கப்பட்டுள்ளது.

**5. சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகள்**

இது ஏழு ஏடுகளை அடக்கியது. தலையாலங்கானத்தில் பாண்டியன் நெடுஞ்செழியன் பெற்ற வெற்றி, அரிகேசரிக்குப் பிறகு அவனுடைய மகன் சடிலன் இராசசிம்மன் வரகுணன் சிரீவல்லபன், இரண்டாம் வரகுணன், பராந்தகச் சடையன் என்ற பாண்டிய குலமரபு ஆகியவை எடுத்துச் சொல்லப்பட்டு உள்ளன. இரண்டாம் இராசசிம்மன் இந்தச் செப்பேட்டை வெளியிட்டான்.

**6. சிவகாசிச் செப்பேடுகள்**

இந்தச் செப்பேடுகள் 1960-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது ஐந்து

ஏடுகளைக் கொண்டுள்ளன. இந்தச் செப்பேட்டை வெளியிட்டவன் வீரபாண்டியன். தீவிரகோபன், மானாபரணன் என்ற அரசர்களின் பெயர்களை இந்தக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

**7-10. ஆய்குல மன்னர்களின் செப்பேடுகள்**

பொதியமலை, திருவாங்கூர், கன்னியாகுமரி பகுதிகளை ஆண்டுவந்த ஆய்குல அரசர்களின் நான்கு செப்பேட்டுச் சாசனங்கள் கிடைத்துள்ளன. ஆய்குல அரசர்களை பாண்டியர்கள் தங்களுடைய ஆட்சி ஆதிக்கத்தின் கீழ் அடக்கினர். போரில் வெற்றி பெற்ற அரசனுயை விருதுப் பெயர்களை ஆய்குல அரசர்கள் சூட்டிக்கொண்டனர்.

**பார்வை நூல்கள்**


- தமிழ்நாட்டு வரலாறு - தமிழ்ப் பல்கலைக் கழகம், (பல்லவர் பாண்டியர் காலம்).
- சதாசிவபண்டாரத்தார். தி.வை, பாண்டியர் வரலாறு.
- சாம்பசிவன். ச, மாநகர் மதுரை.
- தங்கவேலு. கோ, தமிழகவரலாற்று வரிசை - தொ-11,12.
- இரத்தினசாமி, சங்ககாலஅரசர்கள்.
- தமிழண்ணல், புதியநோக்கில், தமிழ் இலக்கிய வரலாறு.